
# நல்லுரை

## வெண்பா

ரெ. முத்துக்கணேசன்



T14907
R005E02

# நல்லுரை
## வெண்பா

*ஆசிரியர்*

ரெ. முத்துக்கணேசன்

விற்பனை உரிமை :
நவயுகப் புத்தகாலயம்
கல்லுக்கட்டி :: காரைக்குடி.

முதற் பதிப்பு : நவம்பர் 1953
உரிமை ஆசிரியற்கு
விலை ரூபாய் ஒன்று

இந் நூலாசிரியர்
எழுதிய
'வாழ்க உலகம்'
(கட்டுரைகள்)
விலை அணா எட்டு.

# முன்னுரை

நூலின் பெயர் ' நல்லுரை வெண்பா ' என்பது. கடவுள் வாழ்த்து உள்பட முப்பது நேரிசை வெண் பாக்களால் ஆகியது இந் நூல். எளிய – இனிய – சொற்களால் யாக்கப் பெற்றுள்ளது. மாணவர்தம் பருவத்திற் கேற்ப, வாழ்வின் அற உண்மைகளைத் தொகுத்துக் கூறுவதே இந் நூலின் குறிக்கோள். முன்னோர் வழிநிற்கும் இந் நூலைத் தமிழகம் ஆதரிப்பதாக !

ஆசிரியன்.

# உள்ளுறை


| | | | பக்க எண் |
|---|---|---|---|
| க. | கடவுள் வாழ்த்து | ... | 9 |
| உ. | நல்லன கொள்ளல் | ... | 10 |
| ங. | நல்லோர் மனம் | ... | 11 |
| ச. | நன்றறிந்த மாண்பு | ... | 12 |
| ரு. | ஒழுக்கப் பண்பு | ... | 13 |
| சா. | இல்லற இயல் | ... | 14 |
| எ. | பெண்மை | ... | 15 |
| அ. | அன்புடைமை | ... | 16 |
| கூ. | தாயன்பு | ... | 17 |
| க0. | பயன் கருதாமை | ... | 18 |
| கக. | உண்ணல் முறை | ... | 19 |
| கஉ. | நல்வழிச் செல்வம் | ... | 20 |
| கங. | உற்றுழி உதவி | ... | 21 |
| கச. | புகழ் வாழ்வு | ... | 22 |
| கரு. | கூடா நட்பு | ... | 23 |
| கசா. | வித்தக நட்பு | ... | 24 |
| கஎ. | பொருளுறவு | ... | 25 |

| | | | |
|---|---|---|---|
| கஅ. | தாழாமை | ... | 26 |
| ககூ. | மடியின்மை | ... | 27 |
| உO. | சினவாமை | ... | 28 |
| உக. | பொறுமை | ... | 29 |
| உஉ. | பேராசையின்மை | ... | 30 |
| உரு. | உழைப்பு | ... | 31 |
| உச. | இன்பவீடு | ... | 32 |
| உ௫. | சான்ஞேர் தவம் | ... | 33 |
| உசா. | ஒருமைப்பாடு | ... | 34 |
| உஎ. | உள்ளத் துறவு | ... | 35 |
| உஅ. | விதிவழி | ... | 36 |
| உகூ. | இறையுணர்வு | ... | 37 |
| ௩O. | திருக்குறள் | ... | 38 |

க

## கடவுள் வாழ்த்து

○

மூவா முதலாய்
முழங்கு தமிழ்வேதப்

பாவா யிலங்கு
பரம்பொருளை - நாவால்

துதித்திடுவோம் நாடித்
தொழுதிடுவோம் என்றும்

பதித்திடுவோம் நெஞ்சில்
பணிந்து !

உ

# நல்லன கொள்ளல்

○

செத்தை யகற்றியே
செம்மண்ணில் தன்வயிற்றை
மெத்துதலாய் வைத்துறங்கும்
மென்முயல்போல்-இத்தரையில்
கண்ட குறையைக்
களைந்தொதுக்கி நல்லவற்றைக்
கொண்டு மகிழ்தல்
குணம்!

ரு

## நல்லோர் மனம்

○

கழிவுநிலை நீரதனில்
கங்கை கலக்க

இழிவுநிலை நீங்கு
மியல்போல்-வழிநிலையில்

தூற்றுவார் புன்மொழியைத்
தூயநிறை பண்பாலே

மாற்றுமே நல்லோர்
மனம்!

ச

## நன்றறிந்த மாண்பு

○

புதுமலரை நாடிப்
புலஞரத் துய்க்கும்

மதுகரம்போல் நன்றறிந்த
மாண்பால் - இதுவுலகில்

தீதிலா நல்லறத்தைத்
தேடி யதன்வழியே

கோதின்றி வாழ்தல்
குணம்!

௫

## ஒழுக்கப் பண்பு

○

மக்கள் மதிப்பும்
மறையோடு செல்வமும்

ஒக்கவாய்த் தாலும்
ஒளிராவாம்-தக்க

ஒழுக்கமெனும் பண்பில்
உருவாகும் கண்டீர் !

வழுக்கிலா வாழ்வின்
வழி !

சா

# இல்லற இயல்

○

வருவாரைப் போற்றியே
வாழ்மக்கள் பெற்றுத்

தருவாய்க் கொடிசுற்றத்
தானே-உருவான

பல்லறமுங் காத்துப்
பயன்கருதா வாழ்முறைதான்

இல்லறத்தார்க் கேற்ற
இயல் !

எ

## பெண்மை

○

உண்ட உணவால்
உயிர்வாழக் கண்டதுபோல்

கொண்ட கணவன்
குணமறிந்தே-அண்டமதில்

உண்மைப் பணியால்
உளங்கலந்து பேணிடுவாள்

பெண்மை நலங்கனிந்த
பெண் !

அ

## அன்புடைமை

○

அறம்பயக்கும் பண்படா
ஐம்புலனைக் காக்கும்

திறம்பயந்து நாளும்
தெளிக்கும்-மறம்பயக்கும்

கொண்டாரைப் போற்றும்
குலமுயர்த்தும் அன்புபோல்

உண்டோ உலகில்
உரை !

சஅ

## தாயன்பு

○

மக்கள் சமுதாயம்
மாநிலத்தி லுய்வதற்குத்

தக்க வழிகேளாய் !
தாயைப்போல்-எக்காலும்

ஏதமிலா அன்பை
இதயத்தில் கொண்டுநிதம்

வாதனைகள் ஏதுமின்றி
வாழ் !

க0

## பயன் கருதாமை

○

பெற்றவளின் உள்ளம்
பெறுபயனை நாடாமல்

உற்றளவு செய்யும்
உறுதுணைபோல் - கற்றவர்கள்

பற்றற்ற நற்செயலால்
பல்லோர்க் குதவியிங்கு

அற்றம் களைதல்
அறம்!

கக

## உண்ணல் முறை

○

விண்ணேக்கி வாழ்மலரும்
வேணளவு தன்னுணவை

மண்ணில் அடையும்
மதியேபோல் - எண்ணின்

உடலின் நிலையறிந்து
உண்ணுதலே மாந்தர்

கடனும் நலமுமெனக்
காண் !

கஉ

## நல்வழிச் செல்வம்

○

எவ்வித் திரியும்
இளங்குருவி அத்தனையும்
வவ்வாது தன்குலத்தின்
வாயுணவை - இவ்வுலகில்
நல்வழியிற் செல்வ
நலந்துய்ப்போர் நன்மக்கள்
அல்வழியிற் செல்லார்
அறி !

கரு

## உற்றுழி உதவி

○

விண்குளிரத் தோன்றி
விரிமலரை முத்தமிட்டு

மண்குளிரப் பெய்யும்
மழையேபோல் - பண்குளிறும்

நற்றமிழ்ப் பாவின்
நயமுணர்ந்தா ருள்ளம்போல்

உற்ற நிலைகண்
டுதவு !

கச

## புகழ் வாழ்வு

○

எங்கு பிறந்தாலும்
எம்மலரும் வீழுமுன்
தங்கு மணப்புகழைத்
தானிறுவும் - அங்கதுபோல்
மன்னுலக வாழ்வு
மறையாமுன் மாற்றுயரும்
பொன்னெனவே வாழ்க்கை
புரி !

கரு

## கூடா நட்பு

○

நின்றுவக்கும் சொல்லால்
நிறைநடிப்பால் தன்னலத்தால்

வென்றுவக்கும் நட்பை
விழைந்தக்கால்-கொன்றுவக்கும்

வேடரின் கைப்புகுந்த
வெங்கணைபோ லாகுமே

கூடத் தகுதியிலார்
கூட்டு !

கசு

## வித்தக நட்பு

○

வித்துமுதல் அத்தனையும்
வேற்று மரவேரின்

சத்துணவைத் தானுறிஞ்சும்
சந்தனம்போல் - இத்தரையில்

ஒத்து மிகவாழ்ந்
துறவாடித் தான்கெடுக்கும்

வித்தகமாம் நட்பை
விலக்கு !

கஎ

## பொருளுறவு

○

வருசுற்றம் சூழுறவாய்
வாழ்வா ரிடத்துப்

பொருளுறவு கொண்டக்கால்
பூவில்-அருள் அழியும்

அன்பழியும் ஆதரவாம்
அத்தனையும் போயழிய

வன்பழியே நிற்கும்
வளர்ந்து !

கஅ

## தாழாமை

○

கோமுணவைத் தன்வலியால்
கொன்றுடனே தின்பதலால்

கீழுணவைத் தீண்டாத
கேசரிபோல் - வாழுலகில்

பாழ்வறுமைக் காலமே
பாம்பியல்பில் சீறிடினும்

தாழ்வுநிலை ஏற்றல்
தவறு !

கக

## மடியின்மை

○

தேய்த்துப் பொருள்போக்கும்
தேர்ந்த நிலைமாய்க்கும்

ஏய்த்துப் பொருள்தேட
எண்ணமுறும்-வாய்த்தபேர்

ஆக்கத்தைக் கொன்றே
அழிவைத் தருமடியை

ஊக்கத்தால் நீக்கல்
உயர்வு !

உ0

## சினவாமை

○

சிந்தை கெடுக்கும்உன்
சீர்வாழ்வைப் பாழ்படுத்தும்

முந்தை நலத்தின்
முகமழிக்கும் - தந்தை

உறவறுத்துத் தாயை
யொதுக்குமே அந்தோ

அறவே சினத்தை
அடக்கு !

உக

## பொறுமை

○

பல்கருவி கொண்டு
பலகாலம் கல்பிளந்தும்

மல்பொருளை நல்கும்
மலையேபோல் - கல்லார்

வசைமொழிகள் பேசிடினும்
வாழ்வுநிலை யோங்க

நசைபொறுத்து நிற்றல்
நலம்!

உஉ

## பேராசையின்மை

○

கொண்ட மனைவாழ்வின்
  கூட்டழிக்கும் மற்றவர்பால்
கண்டபொருள் தானடையக்
  கால்கொள்ளும் - அண்டமதில்
பேராசை யென்னும்
  பெரும்பேயை நம்வாழ்வில்
வாராது காத்தல்
  வழி !

உ௫

## உழைப்பு

○

கூடுகட்டி நின்று
குலமாய்த் திரிந்துநிதம்

பாடுபடும் தேனீப்
பறல்போல - நாடுதனில்

வற்று உழைப்போடு
வாழத் தொடங்குவதே

கற்றூர்தம் வாழ்வின்
கடன் !

உச

## இன்ப வீடு

○

வினைசெய்து நாளும்
விருந்தளித்துக் காக்கும்

மனைவாழ்வாம் இவ்வுலக
மாண்பை - நினையுங்கால்

அன்பிறைவன் தங்குதற்கு
ஆலயமா நின்றிலங்கும்

இன்பநிறை வீடென்
றியம்பு !

உரு

## சான்றோர் தவம்

○

இன்றுவரும் துன்பத்தை
எண்ணிக் குலையாது

நின்றுபுகழ் சூட
நினைந்துழைக்கும் - என்றும்

நலம்பயக்கும் தொண்டொன்றால்
நானிலத்தைக் காக்கும்

தலம்பயந்த சான்றோர்
தவம்!

உசா

## ஒருமைப்பாடு

○

வண்ணநிறங் கண்டும்
வழிவிலகாத் தேன்வண்டு
திண்ணமுடன் தேனைத்
திரட்டுதுபார் - எண்ணமெலாம்
எத்தொழிலைச் செய்யுங்கால்
ஏதுநிலை வந்தாலும்
அத்தொழிலைக் காத்தல்
அழகு !

உஎ

## உள்ளத்துறவு

○

உறவு நிலையற்ற
 உள்ளத் துறவே
துறவு நிலையென்பர்
 தூயோர் - புறவுலகில்
மற்றத் துறவு
 மறைந்தொழுகும் மாந்தர்க்கே
உற்ற துறவென்
 றெழி !

உ அ

## விதிவழி

○

தந்திரத்தைக் கொண்டாலும்
    தத்துவத்தைக் கற்ருலும்
எந்தவழி சென்ருலும்
    ஏய்த்துவிடும் - அந்தவிதி
வாழ்ந்தாலும் தீமைசெயும்
    வாழவழி காட்டுமிங்கு
தாழ்ந்தா லுயர்த்துமே
    தான் !

உகூ

# இறையுணர்வு

○

முத்தமிட்டுக் கூடி
முகங்களித்த நாளெல்லாம்

இத்தரையில் ஏகிவிடும்
என்றெண்ணு - பித்தனவன்

தந்திட்ட பேரறிவால்
தாயான தத்துவனைச்

சிந்தனையில் வைத்தல்
சிறப்பு !

௩0

## திருக்குறள்

○

காதற் களிப்பூட்டும்
　　கற்க அறமுணர்த்தும்

போதப் பொருளுரைக்கும்
　　பொய்யாத - வேதமெனும்

நீதித் திருக்குறளை
　　நெஞ்சாரத் தம்வாழ்வில்

ஓதித் தொழுதொழுக
　　ஓர்ந்து !

## உரைக் குறிப்பு

| | | |
|---|---|---|
| க. | மூவா முதல் | - முழுமுதற் பொருள் |
| உ. | மெத்துதலாய் | - அப்புதலாய் ; மெதுவான தன்மை பொருந்தும்படியாய் |
| ச. | மதுகரம் | - தேன்வண்டு |
| | கோதின்றி | - குற்றமின்றி |
| எ. | அண்டம் | - உலகம் |
| அ. | மறம் | - வீரம் |
| கூ. | ஏதமிலா | - கேடில்லாத ; குற்றமில்லாத |
| க0. | அற்றம் | - துன்பம் |
| கங. | பண்குளிறும் | - இசை ஒலிக்கும் |
| கடு. | வெங்கணை | - கொடிய அம்பு |
| கசு. | வித்தகம் | - அதிசயம் |
| கஅ. | கேசரி | - சிங்கம் |
| உக. | மல்பொருள் | - வளமான பொருள் |
| | நசை பொறுத்து | - அன்பால் பொறுத்து |
| உஉ. | கால்கொள்ளும் | - தொடங்கும் |
| உங. | பறல் | - பறவை ; புள் ; வண்டு |

கலைமகள்-காரைக்குடி போன்: 12.